**தரம் :- 13 (2016)** **தமிழ் – II**

## பகுதி - I

***01)*** **(ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.**

1. குற்றியலுகரம் என்றால் என்ன? உதாரணந் தந்து விளக்குக.
2. கூட்டுப்பெயர் பற்றி சுருக்கமாக விளக்குக.
3. செய்து என்ற வினை எச்சம் ஆக்கப்படும் முறையினை எடுத்துக் காட்டுக.
4. தன்வினை பிறவினை பற்றி கருத்துரை வழங்குக.
5. வாக்கிய இணைப்பில் ஆனால், ஆகவே என்ற இடைச் சொற்களின் பயன்பாடு பற்றி விளக்குக.

***02)*** **(அ) பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

வாய்மை என்பது வாயின் பண்பு எனப்படும். வாயிலிருந்து வரும் வார்த்தைகள் பிறருக்கு எவ்வகையிலும் துன்பத்தைக் கொடுக்காமல் இனிமைப் பண்புடையதாக இருத்தல் வேண்டும். நாம் பிறருக்கு அளித்த வாக்குறுதிகளை மீறாதிருப்பதும் வாய்மை எனப்படும் கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம் என்று வாய்மையின் பெருமையை நாளமகாராஜன் விசுமித்திரருக்கு எடுத்துரைத்தமை குறிப்பிடத்தக்கது.

உண்மை என்பது உள்ளத்தின் பண்பு. உள்ளம் உன்னியதை பிறருக்கு ஒழியாதிருத்தல் உண்மை எனப்படும். உள்ளத்தில் உள்ளதே உதட்டில் வரவேண்டும்.

மெய்மை என்பது உடலின் பண்பு உடலும் உடலுறுப்புக்களும் தத்தமக்குரிய தொழில்களை செய்வதில் தளராமையும் பொருத்தமில்லாதவற்றை செய்யாமையுமே மெய்மை எனப்படும்.

உள்ளத்தால் உண்மையை உன்னி வாயினால் வாய்மையைக் கூறி உடம்பினால் மெய்மையாக ஒழுகி ஒருவன் நடந்து கொள்வானாயின் அவன் எல்லா வகையிலான நலன்களையும் அடைவான். ஆகவே வாய்வை மெய்மை, உண்மை என்ற மூன்று சொற்களும் தற்காலத்தில் ஒரு பொருளைத் தருமாயினும் கூர்ந்து நோக்கின் அவற்றின் செயற்பாட்டில் வேறுபாடு உண்டு.

உள்ளம் நினைத்ததை பிறர் அறியாதவாறு தக்க சூழ்ச்சிகளினால் மறைத்து சிலர் வாழ முற்படலாம். உடலுறுப்புக்களால் மெய்யொழுக்கம் உள்ளவன் போல் வெளியுலகிற்கு தன்னைக் காட்டிக் கொண்டு நடக்கலாம். வாயினால் வாய்மைக்கு மாறான வகையில் பொய்யுரைத்து வாழவும் முற்படலாம். இம்மூன்று செயற்பாட்டிலிருந்து வழுவி நடப்பவன் அரசனாயிருந்ததாலும் நிச்சயம் அவன் தண்டிக்கப்படலாம். அவன் தன் வாழ்க்கையில் பெரும் துன்பங்களை எதிர்நோக்க வேண்டிவரும். (10 புள்ளிகள்)

**(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை கூறுக.**

ஒருவன் சம்பாதிக்கின்ற பொருள், அனுபவிக்கின்ற பொருள் 'பழியஞ்சிய' பொருளாக இருக்க வேண்டும். பழியஞ்சுதலாவது பழிக்கு அஞ்சுதல், நாம் தேடுகிற அனுபவிக்கிற பொருளால் மற்ற ஓர் உயிருக்கு கேடு வராமலிருக்க வேண்டும். தமது பொருள் மற்றோர் உயிரைக் கலக்கி அதனை கண்ணீர் வடிக்கச் செய்யாததாக இருத்தல் வேண்டும். இது பொருளை ஈட்டுபவர்கள் உறுதியாக கொள்ளவேண்டிய முதலாம் விதி. மற்றோர் உயிர் கண்ணீர் பெருக்க நாம் வலித்து பொருளைத் தேடுவோமானால் அந்தப் பொருள் நமக்கு பெரு நட்டத்தை விளைவிக்கும். அப்படிப்பட்ட பொருள் நம்மிடம் வருமானால் அது சிறிது காலம் நம்மிடம் இருந்து பெரிய பகட்டுகள் செய்து விட்டு மெல்ல மெல்ல நம்மிடம் முன்னர் இருந்த பொருட்களையும், கௌவிக் கொண்டு ஒரு நாளைக்குப் போய்விடும். 'அழக் கொண்ட எல்லாம் அழபோம்' ஆகவே பொருளை ஈட்டும் போது பழிக்கஞ்சி ஈட்ட வேண்டும். இது பொருளாதார சாத்திரத்தின் முதல்விதி. இனி, இரண்டாவது பாத்தூண். இதன் பொருள் பகுத்துண்டல்; நல்வழியாற் பொருளைத் தேட வேண்டும். அவ்வாறு தேடிய பொருளை அனுபவிக்கும் போது பகுத்து அனுபவிக்க வேண்டும். பொருள் பெருக்க எண்ணுகிறவர்கள் அந்தப் பொருள் மறுமையிலும் வந்து நமக்கு உதவ வேண்டுமெனில் கிடைத்த பொருளை வறியவர்களின் அறிவை அழிக்கின்ற பசியாகிய நெருப்பில் ஓமஞ்செய்து அவர்கள் வயிற்றிலே சேமிக்க வேண்டும். அப்படி சேமித்த சேமநிதியை எந்தக் குளத்திலும் எடுக்கலாம். கை நீட்ட வரும்.

(i) ஆசிரியர் தன் கருத்தை நிலை நாட்ட கையாளும் உத்திகள் எவை?
(ii) ஈட்டும் பொருள் மறுமைக்குப் பயன்பட வேண்டுமானால் நாம் செய்ய வேண்டியது என்ன?
(iii) பிறருக்கு கேடு விளையும் படி பொருளைச் சம்பாதித்தால் ஏற்படும் விளைவு என்ன?
(iv) ஆசிரியர் சேமநிதி என எதனைக் கருதுகின்றார்?

*03)* பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
(அ) சிறுவர்களைப் பேணல்
(ஆ) போதைப் பொருள் பயன்பாட்டை தடுத்தல்
(இ) தமிழியல் வளர்ச்சிக்கு பேராசிரியர் க. அருணாசலத்தின் பங்களிப்பு
(ஈ) சமுதாய மாற்றமும் இலக்கியமும்
(உ) எழுத்தறிவின் அவசியம்

National e-learning Portal for The General Education

## பகுதி - II

### பிரிவு 'அ'

*04)* (அ) சங்ககால அகப்பொருள் மரபில் அன்பின் ஐந்திணை பற்றி விளக்குக.
(ஆ) சங்ககாலத்தில் அரசர்களுக்கும் புலவர்களுக்குமிடையிலான தொடர்புகளை எடுத்துக் காட்டுக.
(இ) சங்ககாலப் புலவர்கள் இயற்கை மீது கொண்டிருந்த ஈடுபாட்டினை விளக்குக.

*05)* (அ) பல்லவர்கால பக்தி இலக்கிய மரபு சோழர்காலக் காப்பியங்களில் செலுத்தும் செல்வாக்கினை ஆராய்க.
(ஆ) சோழர்காலம் காப்பிய காலம் எனக் கூறுதல் பொருத்தமுடையதோ என ஆராய்க.
(இ) பிள்ளைத் தமிழ் பிரபந்த வளர்ச்சி பற்றி சுருக்கமாகக் கூறுக.

*06)* (அ) விஜயநகர நாயக்கர்கால இலக்கியங்களின் பொதுப் பண்புகளை விளக்குக.
(ஆ) சோழர்கால இலக்கிய மரபிலிருந்து நாயக்கர் கால இலக்கிய மரபு எவ்வாறு வேறுபடுகின்றது என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
(இ) இக்காலத்தில் எழுந்த பொதுமக்கள் சார்பான இலக்கியங்களின் பண்புகள் பற்றி கருத்துரை வழங்குக.

### பிரிவு 'ஆ'

*07)* (அ) ஆரியச் சக்கரவர்த்தி கால இலக்கியத்திலிருந்து போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் கால இலக்கியம் வேறுபடுமாற்றைத் துலக்குக.
(ஆ) ஐரோப்பியர் காலத்தில் அச்சுயந்திர வருகையால் இலக்கியத்துறையில் உண்டான மாற்றங்கள் பற்றி கருத்துரை வழங்குக.
(இ) ஐரோப்பியர் கால ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் நாவலரின் முதன்மையைப் பரிசீலிக்குக.

*08)* மேல்வருவோருள் யாரேனும் மூவரின் இலக்கியப் பங்களிப்பினை மதிப்பிடுக.
(அ) அரசகேசரி
(ஆ) அப்துல் காதர் லெப்பை
(இ) பேராசிரியர் வி. செல்வநாயகம்
(ஈ) நீலாவணன்
(உ) கே. கணேஷ்